செய்தி வெளியீடு எண் : 1938 நாள் : 04.11.2022

## பொது அறிவிப்பு

## ஜார்ஜ் டவுன் பகுதிக்கான மறுவளர்ச்சித் திட்டம் தயாரித்தலின் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அம்ருத் திட்டத்தின் கீழ், ஜார்ஜ் டவுன் பகுதிக்கு மறுவளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. மேலும் இது தொடர்பாக, ஜார்ஜ் டவுன் பகுதியில் அமைந்துள்ள இராஜா அண்ணாமலை மன்றத்தில், 03.11.2022 அன்று பிற்பகல் 03.00 மணியளவில் பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், பல்வேறு துறைகளின் அதிகாரிகள், ஜார்ஜ் டவுன் பகுதியைச் சார்ந்த பெருமக்கள், வணிகர்கள், வியாபாரிகள், சமூக ஆர்வலர்கள் பங்கேற்று கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர், திரு.ஹிதேஸ்குமார் S மக்வானா, இ.ஆ.ப., கூறியதாவது; இந்தியாவில் அம்ரித்சர், டெல்லி, மும்பை மற்றும் அகமதாபாத் ஆகிய நகரங்களின் சில பகுதிகளில் மறுவளர்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், அந்த சூழ்நிலைக்கேற்ப தேவைகள், வசதிகளை மனதில் கொண்டு நன்கு வளர்ச்சியடைந்த நகரமாக ஜார்ஜ் டவுன் இருந்தது. தற்போது, நவீன காலத் தேவைகளுக்கேற்ப சீரமைக்க ஜார்ஜ் டவுன் மறுவளர்ச்சித் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. பலதரப்பட்ட மக்களின் கருத்துக்களைப் பெற்று, அவர்களின் கோரிக்கைகளுக்கேற்ப இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்பது மறுவளர்ச்சித் திட்டத்தின் முக்கிய அம்சமாகும். முதன்முறையாக, தமிழகத்தில் ஜார்ஜ் டவுன் பகுதிக்கான மறுவளர்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது, இதனைத் தொடர்ந்து, புரசைவாக்கம், திருவல்லிக்கேணி போன்ற பழைய பகுதிகளுக்கும், கோவை மற்றும் மதுரை ஆகிய நகரங்களின் பழைய பகுதிகளுக்கும் இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

உறுப்பினர் செயலர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in